**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் - 107/2018**

**பிரதிவாதி தரப்பு சாட்சி-1 தங்கவேல் - திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 19.08.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

<u>**வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**</u>:

1) எனது பாட்டா பெயர் ரெங்கமநாயக்கர் என்றால் சரிதான். ரெங்கமாநாயக்கர் மனைவி பெயர் நாகம்மா என்றால் சரிதான். இருவருக்கும் 4 ஆண்கள், 5 பெண்கள் என்றால் சரிதான். அவர்கள் முறையே தம்மாநாயக்கர், பெருமாள்நாயக்கர், கொண்டமநாயக்கர், பழனிச்சாமிநாயக்கர், மஞ்சக்காள், பொம்மக்காள், சின்னக்காள், தொப்பக்காள், பாப்பம்மாள் ஆவார்கள். தம்மாநாயக்கர், பெருமாள்நாயக்கர், கொண்டமநாயக்கர் மூவரும் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே இறந்துவிட்டனர் என்றால் சரிதான். பழனிச்சாமி நாயக்கர் வழக்கு தாக்கல் செய்துவிட்டு, நிலுவையில் இருந்த போது இறந்துவிட்டார் என்றால் சரிதான். தம்மாநாயக்கர் மனைவி பழனியம்மாள் என்றால் சரிதான், அவர்களுக்கு 4 குழந்தைகள் என்றால் சரிதான்.

2) சின்னம்மநாயக்கர், பாப்பம்மாள், தங்கவேல், ராணி (எ) தொப்பக்காள் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். பெருமாள்நாயக்கர் மனைவி பழனியம்மாள் என்றால் சரிதான். அவர்களுக்கு எட்டு நபர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். அதில் 5 ஆண்கள் ரெங்கசாமி, பொன்னுச்சாமி, பாலுச்சாமி, ஆண்டிவேல், சகாதேவன் மற்றும் 3 பெண்கள் முத்துலெட்சுமி, நாகலட்சுமி, பொம்முத்தாய் ஆகியோர் ஆவார்கள். கொண்டமநாயக்கருக்கு நாகலட்சுமி ஒரே மகள் ஆவார். இறந்து போன வாதி பழனிச்சாமிக்கு முருகவேல், வேலுச்சாமி, பாலசரவணன், தனபாக்கியம், தனபதி, வளர்மதி, சீலம்மாள் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள்.
(வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி

**Principal District Munsif,**

**Kulithalai.**